# 31ம் நாள் நினைவு

## கலாபூஷணம் தாமோதரம்பிள்ளை
## பிரான்சிஸ் சுப்பிரமணியம்
## 22.11.1937 - 03.02.2018




## அணையா விளக்கு

## 05.03.2018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கலாபூஷணம் தாமோதரம்பிள்ளை
# பிரான்சிஸ் சுப்பிரமணியம்

மண்ணில்
22.11.1937



விண்ணில்
03.02.2018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அட்டைப்பட அதிதி

## இலக்கியத்திலும் ஓவியத்திலும் இலக்கினைப் பதித்த கலைஞர் தாபி. சுப்பிரமணியம்

திருகோணமலை 22.11.1937இல் பிறந்து திருகோணமலைப் பிரதேச செயலாளர் பிரிவில் வசித்து வரும் தாமோதிரம்பிள்ளை பிரான்சிஸ் சுப்பிரமணியம் இலக்கியத்துறையிலும் ஓவியத்துறையிலும் ஈடுபாடு உடையவர். இவர் ஆசிரியர், ஆசிரிய ஆலோசகர், அதிபர் எனக் கல்வித்துறையில் பணியாற்றி ஓய்வு நிலையிலுள்ளார்.

2006ஆம் அண்டு திருமலை செல்வநாயகபுரம் இந்து மகாவித்தியாலத்தில் கணிதபாட ஆசிரியராகக் கடமையாற்றிவரும் திரு.தா.கேதீஸ்வரன் அவர்கள் மூலம் 'தாபி' அவர்களைச் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது.

'கலாபூஷணம' வீணைவேந்தன் த.சித்தி அமரசிங்கம்(அமரர்) இவரைப்பற்றிய அறிமுகத்தகவல் 2001 இல் தந்த போதிலும் 2006 இல் நேரடியாக இவரது இல்லத்தில் சந்தித்து உரையாட சந்தர்ப்பம் அமைந்தது.

ஆடம்பரமின்றி அமைதியாக ஆனால், நகைச்சுவை ததும்ப கதைத்து உறவாடும் இவரது பாங்கு ஒரு தனிரகம், 1954 ஆம் ஆண்டு 'சுதந்திரன்' பத்திரிகையில் 'நேர்த்திக்கடன்' என்ற தலைப்பில் இவரது முதல் ஆக்கம் பிரசுரமாகியது. அதே ஆண்டில் ஈழகேசரியிலும் இவ்வாக்கம் பிரசுரம் ஆகியது. அதனைத் தொடர்ந்து அரை நூற்றாண்டுக்கு மேல் எழுதிவருகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை, நாவல், நாடகம், கவிதை, கட்டுரை என்பன எழுதிவருவதுடன் ஓவியம் வரைவதிலும் ஈடுபாடு காட்டுகின்றார்.

இவருடைய தந்தையார் தாமோதிரம்பிள்ளை, தாயார் பரஞ்சோதி, மனைவி F.S.அஞ்சலீன், பிள்ளைகள் F.S.திருமரூபன் (B.Sc), நில அளவையாளர், யூடிரூபவதனி அமல்ராஜ் (B.Com) விரிவாக்கல் உத்தியோகத்தர், F.S.கிருபகரன் (தொழில்நுட்ப உதவி அதிகாரி) ஆகியோராவர். இவருடைய மனைவியும் பாடசாலை பிரதி அதிபராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றவர்.

இவர் எழுத்துலகில் தாபி சுப்பிரமணியம், சு.பிதா, ஆகிய பெயர்களில் எழுதிவருகின்றார். இவர் தனது கல்வியை திரு/புனித சூசையப்பர் கல்லூரி, யாழ்/கொழும்புத்துறை ஆசிரியர் கல்லூரி, மட்/ஆசிரியர் கல்லூரி ஆகியவற்றில் கற்றுள்ளார். இவரது இலக்கியத்துறை ஈடுபாட்டிற்குக் காரண கர்த்தாக்களாக இருந்தவரென ஆரையூர் அமரன், சித்தி அமரசிங்கம் ஆகியோரைக் குறிப்பிடுகின்றார்.

தாபி சுப்பிரமணியம் அவர்களின் நூலுருப்பெற்ற ஆவணங்களாகப் பதிவாகியுள்ளவை.

1. விடாமுயற்சி (சிறுவர்கதைத் தொகுப்பு - 1959)
2. சந்தனக்குச்சு (சிறுகதைத் தொகுதி - 1960)
3. இதயங்கள் அழுகின்றன. (நாவல்- 1977) வீரகேசரி வெளியீடு:61
4. ஒற்றைப்பனை (சிறுகதைத்தொகுதி)
5. நடையிலே நாமூன்று நாட்கள் (குறுநாவல் 2000)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரான்ஸ் தமிழ் ஒலி மன்றம் நாடாத்திய அனைத்துலக வானொலி நாடக எழுத்துப்பேழைப் போட்டியில் 1998 ஆம் ஆண்டு முதல் பரிசாக ஐம்பதினாயிரம் (50.000=) ரூபா பெற்றுக்கொண்டார். 22.11.1998 ஞாயிறு தினக்குரலில் இவரது பரிசு விபரம் புகைப்படத்துடன் பிரசுரமாகியது.

சிங்கள நாளேடான 'சிலுமின' பத்திரிகையில் 29.05.2003 இல் இவரது இலக்கிய சேவை பற்றிய கட்டுரையை புகைப்படத்துடன் திரு.கமல் பேரேரா என்பவர் எழுதிப் பிரசுரம் செய்து பாராட்டிக் கௌரவித்தார். இவர் இதுவரை பெற்ற கௌரவங்கள் / விருதுகளாக குறிப்பிடத்தக்கவை பின்வருமாறு

1. மூத்த கலைஞர் விருது (2000)
2. ஆளுநர் விருது (வடக்குகிழக்கு மாகாணம் 2001)
3. கலாபூஷணம் (2002)

அகில இலங்கை எழுத்தாளர் சங்க உறுப்புரிமை, ஓவியக் கலைஞர் ஒன்றிய உறுப்புரிமை, திருகோணமலை நகராட்சிமன்ற உறுப்புரிமை பெற்றவராக விளங்குகிறார். அத்துடன் திருகோணமலை கலை இலக்கிய ஒன்றியம் (2003) இலும், திருகோணமலை பிரதேச சாகித்திய விழா (2006) இலும், திருகொணமலை மாவட்ட நூலக அபிவிருத்திச் சங்கம் நடாத்திய தேசிய வாசிப்புத் தினம் (2008) இலும் கௌரவிக்கப்பட்டு சான்றிதல்களும் பெற்றுக் கொண்டார்.

காலி மாவட்டம் - லபுதுவ ஸ்ரீ தம்ம தேசிய பாடசாலை மைதானத்தில் நடைபெற்ற ஐந்து நாள் தேசிய கடேற்பாசறை 2001 இல் திருகோணமலை மாவட்ட கடேற்குழு அகில இலங்கையிலே சிறந்ததாகத் தெரிவு செய்யப்பட்டது. இலங்கை புனித ஜோன்ஸ் அம்புலன்ஸ் சங்கமும் படையும் நடாத்திய இத்தேசிய கடேற் பாசறையில் நாட்டின் காலி, கொழும்பு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டி, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, அம்பாறை, திருக்கோணமலை, கம்பஹா, குருணாகல், பதுளை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 450 இற்கு அதிகமான கடேற்களும் நூற்றுக்கு மேற்பட்ட அதிகாரிகளும் பங்குபற்றினர். 01.08.2001 - 05.08.2001 வரை இப்பாசறை நடைபெற்றது. திருகோணமலை மாவட்ட கடேற் குழு நான்கு வெற்றிக் கேடயங்களைச் சுவீகரித்தது. தேசிய பிரிவில் சிறந்த படைப்பாளிக்கான பாடலை தா.பி. சுப்பிரமணியம் இயற்றி பாராட்டையும் பரிசையும் பெற்றுக் கொண்டார்.

திருகோணமலை புனித வளனார் வித்தியாலய (அதிபர்-தரம் 1) தாபி. சுப்பிரமணியம் 37 வரு-ஆசிரிய சேவையைப் பூர்த்திசெய்து தமது 60 ஆவது வயதில் ஓய்வு பொற்றார். 15 வருடங்கள் உதவி ஆசிரியராகவும் 22 வருடங்கள் அதிபராகவும் பணிபுரிந்தார். திருமலையின் நகரசபை உபதலைவராகவும், திருகோணமலை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் இயக்குனர் சபை உறுப்பினராகவும், இலங்கை தமிழ் ஆசிரியர் சங்கத்தில் உபதலைவரகவும், கிழக்கு மாகாணக்கொத்தணிப் பாடசாலைகளின் உதவிக் கொத்தணி அதிபராவும் பணிபுரிந்துள்ளார்.

செ.ஞானராசா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரணம்

மரணம் ஒரு நிகழ்வு. தங்க மாளிகையின் திறவுகோல் மரணம் வாழ்க்கையின் ஒரு பகுதி. வாழ்வும் மரணமும் இயற்கையின் இரு பரிமாணங்கள் மரணமின்றி வாழ்க்கை சாத்தியமே இல்லை. மரணத்தின் அடித்தளத்தில் தான் வாழ்க்கை இருக்கிறது, வாழ்வும் மரணமும் இரு கரைகள் போன்றது.

மரணம் நம்மைக் கொலை செய்வதில்லை நாம் வாழும் பொழுது நமக்குள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஒரு நிகழ்வே மரணம் வாழ்வு இதனால் அழிக்கப்படுவதில்லை, மாறாக ஒவ்வொரு கணமும் புதிதாகப் பிறக்கிறது. பழைய மலர்கள் உதிர புதிய மலர்கள் தோன்றுவது போல ஒவ்வொரு கணமும் பழையது இறந்து புதியது நம்மில் பிறக்கிறது.

இது ஒரு தொடர்ச்சியான அதிசயம் அழகான அனுபவமும் கூட மரணம் நிச்சயமானது. நாம்பிறக்கும் போதே மரணம் நிச்சயிக்கப்பட்டு விட்டது. கிறீஸ்து. இறந்தார். உயிர்த் தெழுந்தார். எனவே இயேசுவோடு இணைந்த நிலையில் இருக்கும் நாமும் உயிர்த்தொழுவோம் என்பது நிச்சயம்.

"நாம் இவ்வுலகில் குடியிருக்கும், உடலாகிய கூடாரம் அழிந்து போனாலும், கடவுளிடமிருந்து கிடைக்கும் வீடு ஒன்று விண்ணுலகில் நமக்குண்டு அது நிலையானது"

(2.கொரி 5:1)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனைவியின் கண்ணீர் அஞ்சலி

மண வாழ்வில் மகிழ்ச்சியான
பொன் விழாக் கண்டீர் ஐயா,
பரவசம் கொண்டோம் ஆயினும்
பரிதாபமாய் எம் உள்ளங்களை
பேரிடிக்குள் நுழைத்து விட்டீரே,
திருகோண மலைக்கு பெருமை தந்தீரே,
தேற்றும் தெய்வமாக எம்முடன் வாழ்ந்தீரே,
பட்டி தொட்டிகளும் பலரறிய வைத்தீரே,
பட்டங்களும் விருதுகளும் பலப்பல பெற்றீரே.

இலக்கிய பணிக்கென கலைஞர்விருது,
நாவல் துறைக்கென சாகித்திய மண்டலவிருது,
ஊடகத்துறைக்கென மூத்தகலைஞர் விருது,
வடக்கு கிழக்கில் ஆளுநர் விருது.

இலக்கியப்பணியை இனிதே போற்றி,
ஓவியக் கலையை விருப்புடன் வரைந்து,
சகல துறைக்கென கலாபூஷண `விருது,
சந்திக்கும் கலைஞருடன் உம் நினைவு
இதயங்கள் அனைத்தையும் நிறைந்திருக்கும்,
உம் ஆன்மா இறைவனுக்குள், இளைப்பாறக்கடவது,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளைகளின் அஞ்சலி

அன்பு அப்பா அகிலமே உங்களை பாராட்டுகிறது.
அணையா விளக்காய் அவனியில் வாழ்ந்தீர்கள்.
காலன் உங்களை கவர்ந்தது ஏனோ?
கண்கள் மல்க கலங்கி தவிக்கும் எம்
கவலை போக்குவது யார்?

அறிவும் ஆற்றலும், அமைதியும் கொண்ட நீங்கள்
அனைவராலும் 'தாபி' என்றும் 'பிதா' என்றும்
அன்புடன், பெருமையுடன் அழைக்கப்பட்டீர்கள்.
ஆற்றலும், அரவணைப்பும் கொண்ட உள்ளம்
உடையவரே!

ஏழைகளின் துன்பம் துடைத்த உத்தமரே,
எளிமையான வாழ்வை தமக்கென தெரிந்து
கொண்ட தேவமைந்தனே!
நீர் இன்றி எம் வாழ்வு வேதனையே தந்தாலும்
உம் அடிச்சுவடுகள் யாவும் எம்
உயிருள்ள வித்தாயுள்ளது.
மறைந்தும் மறையாத மன்னனாக திகழும்
எம் அப்பா ஆன்மா, சாந்தி அடைவதாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரப்பிள்ளைகளின் அஞ்சலி

அப்பப்பா என்றால் எமக்கு அமுதம்,
அவரின் அறிவாற்றல் எமக்கு நிறைவு,
அவரது பேச்சு நமக்கு சுகந்தமூச்சு,
அவரது கவிதை எமக்கு கண்திறப்பு,
அவரது ஏழ்மை நமக்கு சாட்சி,
அவரது தாழ்மை எமக்கு படிப்பினை,
அவரது எழுத்தாற்றல் நமக்கெல்லாம் பெருமை,
அவரது தன்னலமற்றசேவை நமக்கு முன்உதாரணம்,
அவரது நாட்டுப்பற்று எமக்கு உரிமை சொத்து,
அவரது நற்பண்பு எமக்கு ஒரு வழிகாட்டி,
அவரது பெருமை எமக்கெல்லாம் பெருமை,
அவரது புகழ் இறைவனுக்கே புகழாகட்டும்
அவரது தன்னலமற்ற சேவை நமக்கு ஓர் எடுத்துக்காட்டு
இறைவனுக்குள் நித்திரையடைந்த எம்
அன்பு அப்பப்பாவின் ஆன்மா இறைவனில் இளைப்பாறட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் அப்பப்பா

அ ன்னை அரவணைத்தார் அன்று,
ஆ ண்டவர் அரவணைத்தார் இன்று,
இ ன்புற்றோம் அவர் நிழலில்,
ஈ கை வரிசையிலவர் முதலில்,
உ றவால் உம்மை இழந்தோம்
ஊ ரறிந்த நல்ல ஆசானே!
எ ழுத்தாளனாய் உலகில் மிளிர்ந்தீரே!
ஏ டுகள் பலவற்றையும் படைத்தீரே!
ஐ யந்தவிர்த்து வாழ்ந்தீரே!
ஒ ற்றுமையின்பலம் வாழ்வில் கண்டீரே!
ஓ வியம் பல வரைந்தீரே
ஔ வையின் வாழ்வை தனதாக்கினீரே.

உம் ஆத்துமா இறைவனில் சாந்தி அடைவதாக
ஆன் நதுஷிக்கா அமல்ராஜ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசை அப்பப்பா

அப்பப்பா எனக்கு அமுதம்,
ஆசை வார்த்தை கூறுவதில் நிகர் அவரே,
இனிமையான பண்பின் கலைஞர் அவரே,
ஈகையின் வள்ளலும் அவரே,
உத்தமனாய் வாழ்ந்த ஆசானும் அவரே,
ஊரறிய புகழ் ஈட்டிய வரும் அவரே,
எந்தப் பணியிலும் நிறைவு கண்டவர் அவரே,
ஏற்ற கலைகளை வாழ்வில் கற்றவரும்,
ஐயம் திரிபுற வாழ்ந்த செம்மலும் அவரே
"ஒற்றுமையே பலம்" என்பதைக் கடைப்பிடித்தவரும் அவரே,
ஓதுவதில் மனம் தளராதவரும் அவரே,
ஔடதம் விரும்பாதவரும் அவரே.


**சாந்தி, சாந்தி, இறைவனில் இளைப்பாறுவாராக.**

**கரல்ட் பிரணவன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கிய எழுத்துப்பணிக்கு ஆற்றிய சேவைக்கு கிடைத்த சாகித்திய விழா சின்னங்கள்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கிய எழுத்துப்பணிக்கு ஆற்றிய சேவைக்கு கிடைத்த சாகித்திய விழா சின்னங்கள்



ஆளுநர் விருது




இலக்கிய சேவைக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கிய எழுத்துப்பணிக்கு ஆற்றிய சேவைக்கு கிடைத்த சாகித்திய விழா சின்னங்கள்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கியப் பணியில் இவர்..........

1954, பாடசாலைக் காலத்திலிருந்தே எழுத்துப்பணியில் ஈடுபட்டு இன்று வரை எழுதிக்கொண்டிருப்பவர் தாபி. சுப்பிரமணியம். இவர் தாபி. எஸ்.ரமணி, சு.பிதா என்ட புனைபெயர்களிலும் தன் பணியைத் தொடர்கிறார். நாடகத்துறை, இலக்கியத்துறை, ஓவியத்துறை, என்பவற்றில் நாற்பது வருடகால சேவையைக் கௌரவிக்கும் முகமாக 1995ல் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டதுடன், 2000ஆண்டளவில் மூத்த கலைஞர் விருதும், ஆளுநர் விருதும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டவர் தாபி.

முற்போக்கு, பிற்போக்கு, நற்போக்கு என்று பலவாறான கருத்துக்களோடு மனம் ஒன்றாமல் தன் போக்கிலேயே எழுதியவர் இவர். இதுவரை விடாமுயற்சி (சிறுவர் கதைத்தொகுப்பு) 1960, சந்தனக்குச்சு (சிறுகதைத் தொகுதி) 1961, இளம்பாதன் (சாரணீய வழிக்காட்டி) 49693, இதயங்கள் அழுகின்றன (நாவல் 1977, கோயிலும் சுனையும் (நாடகத்தொகுதி) 1989, கனிஹுர சாரணீயக் கைநூல்) 1994, அழகியற் கல்வியில் சித்திரம் (சித்திர வழிக்காட்டி) 1999, குடும்பத் தலைவர்களுக்கான வழிகாட்டி நூல் 1999, திருமண ஆயத்த வகுப்பு கையேடு 2000 ஆகிய 9 நூல்களை எழுதி, வெளியிட்டு தமிழ் இலக்கியத்திற்குப் பணியாற்றி வருகிறார் இவர்.

பயிற்றப்பட்ட ஆசிரியராக, ஆசிரிய ஆலோசகராக, அழகியற் கல்வி முதன்மை ஆசிரியராக, தரம் 1 அதிபராக என நீண்டகாலப் கல்விப் பணியையும் புரிந்துவருகிறார். தற்போது கல்விப் பணியில் ஓய்வு பெற்றபோதும் அந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டும் நாடகம், எழுத்து, ஓவியம் எனத் தொடர்கிறது இவரது பணி. இந்தப்பணிகளின் மூலம் பல வழிகாட்டி நூல்களை குறிப்பாக சித்திரப் பாடத்திற்கானதும், சாரணீயத்திற்கானதுமான, நூல்களைத் தந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. திருகோணமலையில் வெளியிடப்படும் சஞ்சிகைகள், தொகுப்புகள் தா.பி.சுப்பிரமணியம் அவர்களின் ஓவியங்களையே தாங்கி வருகின்றன என்பதிலிருந்து ஓவியத்துறையில் இவரின் ஈடுபாட்டினையும், சிறப்பினையும் நாம் உணர்ந்து கொள்ளலாம். உலக ஆசிரிய தினத்தையொட்டி நடாத்தப்பட்ட விஷேட மலருக்கன அட்டை வரைதற்போட்டியில் 1997ல் முதற் பரிசை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. அதேசமயம் இத்தினத்தில்நடாத்தப்பட்ட சிறுகதைப்போட்டியிலும் முதற்பரிசைப் பெற்றுக்கொண்டார். தாபி.சுப்பிரமணியம்.

அடுத்து வானொலி நாடகம், மேடை நாடகம், எனப் பிரதி எழுதும் போட்டிகளிலும் பலரது கவனத்தைப் பெற்றவர். பிரான்ஸ் தமிழ் ஒலி மன்றம் தினக்குரல் பத்திரிகையுடன் இணைந்து நடாத்திய 'சில்லையூர் செல்வராசன் நினைவு' வானொலி நாடகப்போட்டியில் முதல் பரிசாக ரூபா 50000 (ஐம்பாயிரம்) பெற்றுக்கொண்டதுடன் வட கிழக்கு மாகாணக் கல்வி பண்பாட்டு அமைச்சின் நாடகப் பிரதிப் போட்டியில் மூன்றாம் பரிசையும் பெற்றுக்கொண்டார். 2002ம் ஆண்டு இவரது 'திருத்தப்படும் தீர்மானங்கள்' என்ற நாடகம் சித்தி அமரசிங்கத்தினால் மேடையேற்றப்பட்டது. 1970களிலிருந்து வானொலியில் பல நாடகங்களை எழுதி ஒலிபரப்ப வழங்கிக்கொண்டிருக்கும் இவரது. மகாஜோதி 1971, ஆசையை அவி 1972, கோயிலும் சுனையும் 1972, தனக்குத் தனகக்கொண்டால், காலத்தின் முடிவுகள் 2000, வாஞ்சையுடன் கேட்டால் 2001 ஆகியன குறிப்பிடத்தக்கவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்து சுதந்திரன், விவேகி, தினபதி, வீரகேசரி, தினகரன், ஈழகேசரி, வெற்றிமணி போன்ற பத்திரிகைகளிலும் தமிழகத்து கண்ணன், கரும்பு, கலை மகள் போன்ற சஞ்சிகைகளிலும் எழுதியுள்ளார். இவர் சிறந்த கவிஞராகவும் தன்னை இனங்காட்டி வருகிறார். நீரில் பூத்த மலர் என்ற கவிதைத்தொகுதியிலும், கவிதாலயா என்ற கவிதைத்தொகுதியிலும், இவரது கவிதைகள் இடம்பெற்றதுடன் நிவேதனம், ஒற்றைப்பனை ஆகிய சிறுகதைத் தொகுதிகளிலும் இவரது சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன. இவருடைய ஒற்றைப் பனை என்ற சிறுகதை அத்தொகுப்பின் தலைப்பாகவும், தினகரன் வாரமஞ்சரியில் மறுபிரசுரம் செய்யப்பட்டதும் இவரது எழுத்தாற்றலுக்குச் சான்றுகள் எனலாம். மேலும் உலகக் கவிதைத்தொகுப்பின் ஆசிரியரான அழகாபுரி அழகுதாசன் (கண்ணதாசனின் மருமகன்) எழுந்தமானமாக (திடீரென) கவிதைப்போட்டியில் இவர் எழுதிய கவிதையைப் படித்துப் பாராட்டியதோடு தமிழகக் கவிஞர்களுக்கு ஈழத்துக் கவிஞர்கள் எந்த வித்திலும் குறைந்தவர்களல்லர் என்று குறிப்பிட்டதையும் பார்க்கிறோம்.

பல துறை விற்பன்னராக இருந்தபோதும் தனக்கு முன்னோடியாக 1954ல் வகுப்பாசிரியராக இருந்த 'ஆரயம்பதி அமரசிங்கம்' ஆசிரியரை இன்றும் நினைவில் வைத்துப் போற்றுகிறார். அவரும் சக மாணவர்களும் அளித்த ஊக்கமே தன் இன்றைய நிலைக்கு காரணமென்று நன்றியுடனும், நட்புடனும், நினைவுகூருகிறார். மாணவப் பருவத்தில் 'அறிவுச் சுடர்' என்ற சஞ்சிகையை (1954 காலப்பகுதியில்) கையெழுத்துச் சஞ்சிகையாக உருவாக்கிய இவர், இன்றும் 'இனிமை இல்லம்' என்ற குடும்பவாழ்வு பணித்துறையினரின் காலாண்டு: சஞ்சிகையின் இதழாசிரியராக இருக்கிறார் என்பது மனங்கொள்ளாதது. அறிவும் ஆற்றலுங்கொண்ட இவர் பல்வேறு சமூகப் பணிகளைச் செய்வதுடன் எழுதியும் வருகிறார். இவர் பணி தொடர வாழ்த்துகிறோம்.

**ந.பார்த்திபன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2007ஆம் ஆண்டு பிரதேச சாகித்திய விழாவில்
கௌரவம் பெறுவோர் வரிசையில்

## தாமோதரம்பிள்ளை பிரான்சிஸ் சுப்பிரமணியம்

(தாபி சுப்பிரமணியம்)


இவர் 1937.11.207ல் திருகோணமலையில் பிறந்தார். இவர் ஆசிரியராகவும் அதிபராகவும் கல்வி வளர்ச்சிக்கு சிறந்த சேவையாற்றி ஓய்வு பெற்றார். பாடசாலைக் காலத்திலிருந்தே கலை இலக்கிய ஆர்வமுடையவராக காணப்பட்டார். பாடசாலை நாட்களிலேயே பல நாடகங்களை மேடையேற்றினார். அதுமட்டுமன்றி இலக்கியத்துறையில் பிரவேசித்து சிறந்த ஆக்கங்களை வெளிக்கொணர்ந்தார். ''இதயங்கள் அழுகின்றன''என்ற இவரது நாவல் வீரகேசரி வெளியீட்டில் மாபெரும் பாராட்டினைப் பெற்றது ஏனைய ஆக்கங்களான "சந்தனக் குஞ்சு (சிறுகதை)", "கோயிலும் சுனையும்"(வானொலி நாடகத் தொகுதி)"துன்பத்தில் இன்பம்" (கவிதைத் தொகுதி) ஓவியக்கைநூல் (பாடசாலை மாணவர்களுக்கானது) "குடும்ப வாழ்வு" (நலத்துறைக்கானது) "குடும்ப வழிகாட்டி" போன்றவை குறிப்பிடத்தக்கது.

'ஆளுநர் விருது'' 'மூத்த கலைஞர் விருது' "கலாபூஷணம்" போன்ற விருதுகளும் பட்டங்களும் பெற்றுள்ளார். நகராட்சி மன்றத்தின் உப தலைவராக இருந்து சமூகப்பணியையும் புரிந்துள்ளார்(1981-1986வரை), 1979லிருந்து 1984வரை அகில இலங்கை தமிழ் ஆசிரியர்சங்க உபதலைவராக இருந்து பணியாற்றியுள்ளார். 1938ஆம் ஆண்டிலிரந்து திருகோணமலை கலைவாணி மன்றத்தின் செயலாளராகவும் ஈழத்து இலக்கியச்சேவையின் ஆலோசகராகவும் இருந்து பணியாற்றிதோடு தொடர்ந்தும் இவர் நாடகம் இலக்கியம் போன்ற கலை இலக்கியத் துறையின் முன்னேற்றத்தின் நலன்கருதி ஆர்வமுடன் செயற்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமண வாழ்வில் 50வது வருட நிகழ்வின் நிழல்கள்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 80வது அகவையில் குடும்பத்தாருடன்









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலசுகுமார்
மேனாள் முதன்மையர்
கலை கலாசார பீடம்
கிழக்குப் பல்கலைக் கழகம்

# தா.பி.சுப்ரமணியம் அஞ்சலி
# தாபி.எனும் பன்முக கலை ஆளுமை

திருகோணமலை மண் தந்த கலை ஆளுமை மறைந்த செய்தி மனமெங்கும் துயரத்தை விரித்திருக்க இதயம் கனக்க ஒரு அஞ்சலி

தாபி என எல்லோராலும் அன்பாய் அழைக்கப் படும் திருகோணமலையின் கலைத்துவ அடையாளங்களினூடு பயணித்த கலைஞன்.

ஆசிரியராக தன் சமூக வாழ்வை தொடங்கி பின்னாளில் அதிபராக கல்வி அதிகாரியாகவும் பணியாற்றி சமூக அக்கறையோடு அர்ப்பணிப்பு மிக்க சேவையாற்றிய மதிப்பார்ந்த பண்புகள் நிறைந்த மனிதனாய் வாழ்ந்து எல்லோர் மனங்களிலும் தாபி எனும் முத்திரையயை பதித்துச் சென்றுள்ளார்.

நடிகன்
நாடக நெறியாளன்.
நாடக எழுத்தாளன்.
சிறுகதை எழுத்தாளன்.
நாவலாசிரியன்.
ஓவியன்.
அரசியல் செயல் பாட்டாளன்.
சமூக சேவகன்.
என தன் தடத்தை பதித்து நம்மில் ஆளமாக நம் நினைவுகளில் வே'ரூன்றியிருக்கும் கலா வித்தகன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயிலும் சுனையும் எனும் நாடகம் திருகோணமலையின் வரலாற்றை இலக்கியமாக பேசுகிறது குளக்கோட்டனை மையப் படுத்தி நம் மண்ணின் வரலாற்றை பேசிய நவீன புனைவு.

நகைச்சுவை உணர்வு மிகுந்த சொல்லாடல்களை கையாண்டு எல்லோரையும் பொது வெளியில் மகிழ்ச்சுப் படுத்தும் அவரது தனித்துவ அடையாளம்

என்னை விட கிட்டத் தட்ட இருபது வயது மூத்தோன் ஆனாலும் ஒரு நண்பனாகவே பழகும் இனிய சுபாவம் அவருக்கு.

எழுபதுகளில் முன்னோடிகள் சங்கப் பலகை கூட்டங்களில் அறிமுகம் ஆனாலும் பெரிய நெருக்கமில்லை.

எண்பதுகளிலேயே எனக்கும் அவருக்கும் நெருங்கிய தொடர்பு ஏற்படுகிறது என் மாமனார் டி.ஜி.சோமசுந்ரரம் அவர்களுடைய நெருங்கிய நண்பர் நாங்கள் அடிக்கடி குடும்ப உறவாக சந்திக்க சந்தர்ப்பங்கள் ஏற்பட்டது அப்போதுதான் அவரது பன்மைத்துவ புலமையயை நெருக்கமாக அறியும் வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது. அவர் ஓவியங்கள் தமிழ் மரபின் வழி நம் அடையாளத்தை கொணர்ந்தன.ஈழத்து தமிழ் ஓவிய வரலாற்றில் தனித்துவ இடம் அவருக்கு உண்டு.அன்றைய நாட்களில் அழகியல் பாட கல்வி அதிகாரியாக இருந்த யாழ்ப்பாணத்தை சேர்ந்த திரு.இராஜரத்தினம் பெரும் ஓவியர் `அத்தகையவர்களோடு சமதையாக வைத்து பார்க்கப்பட வேண்டிய கலைத்துவ படைப்பாளி தா.பி அவர்கள்.

நான் திருகோணமலையில் விபுலானந்தா கல்லூரியின் பிரதி அதிபராக பணியாற்றிய காலத்தில் வடக்கு கிழக்கு மாகாண தமிழ் தின விழா.இலக்கிய விழா குழுக்களில் ஒன்றாக இருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணியாற்றிய காலங்கள் அவரது ஆற்றல்களை கண்டு கொள்ள வாய்ப்பாய் அமைந்தது.

தமிழ் தேசிய அரசியலில் நம்பிக்கை கொண்டவர் அதனாலேயே திருமலை நகரசபையின் உப தவிசாளராக மக்கள் சேவையாற்றியவர்.எளிமை நேர்மை கடமை என்பனவற்றிற்கு சொந்தக் காரர் பல விருதுகள் பெற்று அந்த விருதுகளுக்கு பெருமை சேர்த்தவர்.

திருகோணமலையின் நவீன கலை வரலாறு உங்களைத் தாண்டி செல்ல முடியாது கோயிலும் சுனையும் தந்த நினைவுகளுடன் உங்களுக்கு விடை தருகிறேன்.

**பாலசுகுமார்**
**லண்டன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகுட அஞ்சலிகள்

தாபியும் தாகமும் ....

தாபி என அன்புடன் அழைக்கப்படும் திருகோணமலையின் பிரபல நாவலாசிரியரும் , கவிஞரும் , ஓவியரும், நாடகவியலாளருமான திரு.தாபி சுப்பிரமணியம் அவர்கள் நேற்றிரவு 03-02-2018 அமரத்துவமடைந்தார்.

தாபி அவர்களுக்கும் எனக்குமான தொடர்பு பல தசாப்தங்கள் கடந்தது.1985 காலப்பகுதி நான் தி/.புனித சூசையப்பர் கல்லூரியில் ஒன்பதாம் ஆண்டு படித்துக் கொண்டிருந்த காலம் தாபி அவர்கள் புனித வளனார் பாடசாலையின் அதிபராக இருந்தார்.

அக் காலத்தில் நான் "தாகம்" என்ற கலை இலக்கிய இதழினை வெளிக்கொணர முயற்சித்த காலங்கள்.

இலக்கியத்தின் மூலமாக ஏற்கனவே அவருடன் தொடர்பில் இருந்த நான் அவரை அணுகி கேட்டபோது உடன் ஒத்துக்கொண்டு "தாகம்"முதலாவது இதழை தனது அழகிய கையெழுத்தாலும் ஓவியங்களாலும் வெகு அழகாக வடிவமைத்து முன் அட்டையில் தனது தாபி.சுப்பிரமணியம் என்ற பெயரை பின் பக்கமாக மாற்றி சு.பிதா பெயரில் ஒரு கவிதையையும் எழுதி இருந்தார்.

"படிப்பினை"என்று பெயரில் அமைந்த எனக்காக எழுதப்பட்ட கவிதை இதுதான்.

"காகம் தன் கூட்டத்தாரோடுணவை
பாகம் பண்ணுவது படிப்பினை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோகம் கொண்டு இளைஞர் தம் துடிப்பினை வெளிக்கொணரும் வேளை தாகம் தரும் தனி இளைஞன் நமக்கொரு படிப்பினை."

1985 இல் தாபி அவர்களின் அமைப்பில் ரோணியோ பதிப்பாக ஆரம்பிக்கப்பட்ட தாகம் பின் நாளில் அச்சு வாகனமேறி 1995 வரை பத்து வருடங்கள் தொடர்ச்சியாக வெளிவந்ததும் திருகோணமலையில் இருந்து அதிக காலம் வெளிவந்ததும், புதிய எழுத்தாளர் பரம்பரையை உருவாக்கியதுமான சரித்திரத்தினை தனதாக்கிக் கொண்டது தாகம்.

1977 ல் வீரகேசரி பிரசுரமாக தாபி அவர்களின் "இதயங்கள் அழுகின்றன "நாவலும் "கோயிலும் சுனையும்" என்ற பெயரில் நாடக நூலும் வெளிவந்துள்ளது.

திருகோணமலை எழுத்தாளர்களின் சிறுகதைகளை தாங்கிய "ஒற்றைப் பனை" நூலில் இவரது சிறுகதையும் உண்டு.

அமைதியான சுபாவம் கொண்ட அமரர் தாபி அவர்களின் மறைவில் திருகோணமலை மண்ணின் இதயங்கள் அழுகின்றன.

அவருக்கு எமது மகுட அஞ்சலிகளும்
தாகத்தின் கண்ணீர் காணிக்கைகளும்.

**மைக்கல் கொலின்.**
**ஆசிரியர்**
**தாகம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூத்த எழுத்தாளர் தாபி சுப்பிரமணியம் சங்கமத்திற்கு வழங்கிய நேர்காணல்

# முழுமையான ஈடுபாடு அவசியம்

**தா**பி என இரு எழுத்துக்களால் பலராலும் அழைக்கப்படும் திருகோணமலையின் மூத்த எழுத்தாளரான தாபி சுப்பிரமணியம் சிறுகதை, நாவல், நாடகம், ஓவியம், கவிதை எனப்பல்துறை ஆற்றல் கொண்ட ஓர் எழுத்தாளர் ஒரு கலைஞர் 1955இலிருந்து கலை இலக்கிய பயணத்தை தொடங்கிய இவர் அறுபது வருட அனுபவத்தை கொண்ட பவள விழா கண்ட ஒருவர்.

1975இல் இவர் எழுதிய இதயங்கள் அழுகின்றன நாவல் வீரகேசரி பிரசுரமாக வெளிவந்து பலரது கவனிப்பையும் பெற்றது. திருகோணமலையில் இருந்து வெளிவந்த பல கையெழுத்து றோணியோ இதழ்களுக்கு ஓவியராக விளங்கியவர். மேடை நாடக நடிகர், வானொலி நாடக பிரதியாக்கத்திலும் சிறந்து விளங்கிய தாபி ஓர் ஆசிரியர்.

சித்திரப்பாட முதன்மை ஆசிரிய ஆலோசகர் அதிபர் என்பதற்கப்பால் திருகோணமலை நகர சபை உதவி தவிசாளராக பதவி வகித்த சமூக சேவையாகளருமாவார். இவரை வீரகேசரி சங்கமம் பகுதிக்காக நேர்கண்ட போது.

**கேள்வி : தங்களது எழுத்துப் பயணத்தின் ஆரம்பம் பற்றி......**

நான் 1953இல் எஸ்.எஸ்.சி படித்துக்கொண்டிருந்த போது அறிவுச்சுடர் என்னும் கையெழுத்துப் பிரதியை நடத்தி வந்தேன். அதில் வெளிவந்த விடாமுயற்சி எனும் சிறுகதையினை அப்போது தமிழகத்திலிருந்து வெளிவந்து கொண்டிருந்த கரும்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் சஞ்சிகைக்கு அனுப்பி வைத்தேன். அக்கதை அவ்விதழில் பிரசுரமாயிற்று அக்கதையை அச்சில் பார்த்த சந்தோஷம் என்னை தொடர்ந்தும் எழுதத்தூண்டிற்று.

**கேள்வி : தங்களிடம் தாக்கத்தை ஏற்படுத்திய எழுத்தாளர்களை பற்றி சொல்ல முடியுமா?**

எனக்கு வாசிக்க சந்தர்ப்பம் கிடைத்த போதெல்லாம் அருகில் உள்ள நூலகமே எனக்கு உதவியது. மணிவண்ணன், ஜெயகாந்தன், காண்டேகர், டொக்டர் மு. வரதராசன் போன்றோருடைய எழுத்து நடை என்னுள் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. இருந்த போதிலும் எனக்கென்று ஒரு தனித்துவத்தை வகுத்துக்கொண்டு எதை கூற முற்பட்டேனோ அதை ஓர் அங்கச் சுவையுடன் எழுதிக் கொண்டிருக்கிறேன்.

**கேள்வி : நீங்கள் நாவல்களும் எழுதியுள்ளீர்கள். உங்களது நாவலான இதயங்கள் அழுகின்றன. நாவல் எழுந்த விதம் சம்பந்தமான அனுபவங்களை பகிர முடியுமா?**

நிச்சயமாக அது ஒரு சுவையான அனுபவம் தான் அப்போது(1975 கல்விக்கொள்கை மாற்றம் காரணமாக ஆசிரியர்களுக்கு புதிய முறையிலான ஆசிரியர் பயிற்சி ஒன்றினை அரசாங்கம் அளித்தது. அதிபர் என்ற வகையில் நான் தெரிவு செய்யப்பட்டேன். மட்டக்களப்பு ஆசிரியர் பயிற்சி கல்லூரியில் பயிற்சி நடைபெற்றது. ஊரில் குடும்ப கடமைகளோடு பல சமூக கடமைகளிலும் ஈடுபட்ட எனக்கு கல்லூரியின் மாலை நேரப்பொழுதைக் கழிப்பது சிரமமாக இருந்தது. இரண்டாம் நாள் மாலை வெளி விறாந்தையில் யோசித்து கொண்டு நின்ற போது ஓர் அறையில் வெளிச்சம் தெரிவதை கண்டு மெல்ல அங்கு சென்றேன்: கல்லூரியின் கணித விரிவுரையாளர் கோ.கோணேசபிள்ளை அவர்கள் ஆழ்ந்த சிந்தனை வயப்பட்டு எழுதிக் கொண்டிருந்தார். என்நிழல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசைவாட்டத்தை கண்டு நிமிர்ந்து அன்பாக என்னை விசாரித்தார்.

எனது நிலைமையை கேட்டு சிரித்த அவர் தனது மேசை லாச்சியை திறந்து பல தாள்களை எடுத்து என்னிடம் நீட்டினார். நீரெல்லாம் கற்பனை வளம் மிக்கவர் என்பதை நான் அறிவேன். இந்த ஓய்வு சந்தர்ப்பத்தை பயன்படுத்தி எதையாவது எழுதும் என்ற போது என்னுள் ஒரு பொறி தட்டியது போலிருந்தது. அடுத்த நாள் மாலையிலேயே சிறுகதை ஒன்றை எழுதத் தொடங்கினேன். ஆனால் அது குறுநாவலாக விரிவடைந்தது.

அதனை பிரதிப்பண்ணி கொண்டிருந்தபோது அந்த விசேட பயிற்சியில் என்னோடு இருந்த நண்பர் கவிஞர் ஜீவரத்தினம் அதனை பார்த்து விட்டு அதனை வீரகேசரி வார வெளியீட்டிற்கு அனுப்பி வைக்கும்படி ஆலோசனை கூறினார் அனுப்பி இரு வாரங்களின் பின்னர் சில குறிப்புக்களுடன் மீண்டும் நாவலை விரித்து எழுதுமாறு ஆலோசனைக் கடிதம் கிடைக்கப்பெற்றது. ஓரிரு நாட்களில் விரிவாக்கல் செய்து மீண்டும் நாவலை அனுப்பிவைத்தேன்.

**கேள்வி : தங்களது எழுத்துப் பயணத்தின் ஆரம்பம் பற்றி......**

நாடகத்துறை என்று கூறும் போது இதனை இரண்டு வகையாக நோக்கலாம். முதலாவது மேடை நடிப்பு மற்றையது நாடக பிரதியாக்கம்.

நடிப்பு என்ற விடயத்தை பார்ப்போமாயின் பாடசாலைக் கல்வியை முடித்து விட்டு வேலை தேடிக்கொண்டிருந்த காலமது. நண்பர்கள் சிலர் சேர்ந்து 'கலைவாணி நாடகமன்றம்' என்ற பெயரில் அமைப்பு ஒன்றை (1958) உருவாக்கினர். இந்த மன்ற அங்குரார்ப்பண நிகழ்வில் நாடகமொன்றை மேடையேற்றுவதென முடிவெடுக்கப்பட்டது. இந்நிகழ்விற்கு கொழும்பிலிருந்து புகழ் பெற்ற கலைஞர்களான ரி.எஸ்.பிச்சையப்பா, லடீஸ்வீரமணி, எஜ்.எம்.ஏ.ஜபார், எம்.எம்.மக்கீன், எஸ்.சோமசுந்தரம் ஆகியோர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்திருந்தனர். இவர்களோடு மறைந்த கலைஞரான சித்தி அமரசிங்கமும் நானும் நடிக்க சந்தர்ப்பம் கிடைத்தமை மறக்க முடியாத அனுபவம். அந்த காலத்தில் எமது மன்றத்தின் சார்பில் பல நகைச்சுவை நாடகங்களை மேடையேற்றினோம்.

அடுத்த வானொலி நாடக பிரதியாக்கம் குறித்து சொல்வதென்றால் ஒரு காலத்தில் சராசரியாக மூன்று மாதங்களுக்கொரு தடவை என்று நாடகங்கள் தேசிய சேவையில் ஒலிபரப்பப்பட்டன. ஆசையை அவி, மகாஜோதி கோயிலும் சுனையும் தனக்கு தனக்கெண்டால் திருத்தப்படும் தீர்மானங்கள் எனப்பல நாடகங்கள் குறிப்பிடத்தக்கவை.

இவற்றில் சில்லையூர் செல்வராசன் நினைவு வானொலி நாடக ஒலிப்பேழைக்காக எழுதப்பட்ட தனக்கு தனக்கெண்டால் (1998) நாடக ஒலிப்பேழைக்கு முதற்பரிசாக ரூபா 5000 கிடைத்தது. அதேபோல் வடக்கு கிழக்கு மாகாண அமைச்சு நடத்திய நாடகப்பிரதி போட்டியிலும் பரிசு கிடைத்தது. இன்று தொலைக்காட்சி வந்தபின் மேடை, வானொலி நாடகங்களுக்கான தேவை வெகுவாக குறைந்து விட்டது.

**கேள்வி : எல்லாவற்றிற்கும் மேலாக தாங்கள் ஓர் ஓவியக்கலைஞர் என்ற அடிப்படையில் தங்களது பங்கு பெரிதளவாக இருந்திருக்கும் என நம்புகின்றேன். அதுபற்றி**

மாணவனாக இருந்த போது வெளியிட்ட கையெழுத்துப் பிரதிக்கு தேவையான ஓவியங்களை வரைந்து வெளியிட்ட அனுபவம் அத்துறையில் பலருக்கும் உதவக்கூடிய ஆற்றலை என்னுள் வளர்த்திருந்தது.

அக்காலத்தில் திருகோணமலையிலிருந்து வெளிவந்து கொண்டிருந்த றோணியோ சஞ்சிகைகளை தட்டச்சு செய்து வடிவமைப்பதுடன் அவற்றிக்கு சித்திரங்களை வரைவதும் எனது பணியாக இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றில் யாழ், உதயம், தாகம், புதுமை செஞ்சங்களை, கமலை கோணைத்தென்றல் என்பன குறிப்பிடத்தக்கன. மேலும் திருகோணமலை நகர பொன் விழா மலர் (1990) சுவாமி விபுலானந்தர் சொற்பொழிவு நூற்றாண்டு மலர் ஆகியவற்றின் முன் அட்டை என் கை வண்ணமே அத்துடன் சித்திரபாட முதன்மை ஆசிரிய ஆலோசகராக பணியாற்றியவேளை ஆசிரியர்கள் பயன்படுத்துவதற்கென சித்திர பாட வழிகாட்டி நூல்கள் பலவற்றை வெளிக்கொணர்ந்துள்ளேன்.

**கேள்வி : தங்களது கவிதை ஆர்வம் எத்தகையது?**

கவிதைத்துறையில் எனக்கு மிகுந்த ஈடுபாடு உண்டு அவ்வப்போது மனதில் தோன்றும் எண்ணங்களை கவிதை வடிவமாக்கிய வாய்ப்புக்கள் நிறையவே கிடைத்துள்ளன. சுபிதா என்ற பெயரில் ஏராளமான கவிதைகள் வெளிவந்திருக்கின்றன. கவிதைத் தொகுதியொன்றினை வெளியிடாத போதிலும் நீரில் பூத்தமலர் கவிதாலயம் முதலிய கவிதை தொகுப்புக்களில் எனது கவிதைகள் வெளிவந்துள்ளன.

**கேள்வி : உங்களுக்கு கிடைத்த பாராட்டுக்கள் விருதுகள் பற்றி கூறுங்கள்?**

விருதுகள் பல கிடைத்துள்ளன. இவை எல்லாம் தானாக வந்தவையே எழுத்துத்துறை சார்ந்த விருதுகள் நாடகம் சார்ந்த விருதுகள், ஓவியத்துறை சார்ந்த விருதுகள் கலாபூஷணம் வடக்கு கிழக்கு ஆளுநர் விருது, திருகோணமலை நகர சபை விருதும் பாராட்டும் நீங்களும் எழுதலாம் வாசகவட்டத்தின் பாராட்டுப்பத்திரம் என்பவற்றோடு அவ்வப்போது சமூக சேவைக்கான பாராட்டுக்களும் கிடைத்துள்ளன.

**நேர்கண்டவர் அச்சுதன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அவரால்
வரையப்பட்ட
சஞ்சிகைகளின்
அட்டைப்பட
ஓவியங்கள்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அவரால்
வரையப்பட்ட
சஞ்சிகைகளின்
அட்டைப்பட
ஓவியங்கள்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவரின் முதல் பரிசு பெற்ற நாவல்

பிள்ளைப் பாசத்தின்
நேர்மையான உணர்வுகளை
சித்திரிக்கும் உன்னத
நாவல்!

ஒவ்வொருவரும் படிக்க
வேண்டியது. 1977

வீரகேசரி பிரசுரம்-61. விலை 3-90




## விருதுபெறும் கலைஞர்
## தாபி. சுப்பிரமணியம்





'மணியம் மாஸ்டர்' என்று பலராலும் அன்போடு அழைக்கப்படும் திரு. தாபி. சுப்பிரமணியம் அவர்களுக்கு அறிமுகம் வேண்டியதில்லை. ஆசிரியராக, ஓவியராக, மேடை நடிகராக, எழுத்தாளராக, வானொலிக் கலைஞராக பிரபலம் பெற்றவர். பல பரிமாணங்கள் இவருக்கு உண்டு. திருமலை மாவட்டத்தின் மூத்த கலைஞர்களில் ஒருவர். அன்னாரது நீண்டகால கலை இலக்கியப் பணிகளைப் பாராட்டி திருகோணமலை-மட்டக்களப்பு மறைமாவட்ட சமூகத் தொடர்பு ஆணைக்குழு இவ்வாண்டுக்கான தொடர்புசாதன விருது - 2000 - வழங்கி கௌரவிக்கிறது. தொண்டன் வாசகர்களுக்காக அவரைச் சந்தித்தோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கிய சாகித்திய விழாக்களின் பெற்ற சான்றிதழ்களின் சில.................









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நகரமுதல்வர் விருது
## 2014

திருக்கோணமலை நகரில்
**கலை இலக்கியத்துறையில்**
சிறப்புப் பணிக்கும், அதன் மேன்மைகளுக்கும்
பங்களித்தமைக்காக
..................திருவாளர் த.பி.சுப்பிரமணியம்..................
அவர்களுக்கு
ஆனித்திங்கள் 28ம் நாள்
இச்சான்றிதழ் பாராட்டி கௌரவித்து வழங்கப்பட்டது

# பிரதேச சாகித்திய விழா - 2006



**பட்டணமும், சூழலும் பிரதேச செயலகம்**
**திருக்கோணமலை**

....கலை இலக்கியத்துறை........ ஆகியவற்றின் வளர்ச்சிக்கு பெரும்
பங்காற்றிய....தங்கராசாப்பிள்ளை பெருமாள் சுப்பிரமணியம்.... அவர்களைக் கௌரவித்து
2007.11.05ந் திகதி நடாத்தப்பட்ட பிரதேச சாகித்திய விழாவில்
இச்சான்றிதழ் வழங்கப்படுகின்றது

திருமதி . ம. சத்தியபாமா
கலாசார உத்தியோகத்தர்,
பிரதேச சாகித்திய விழா குழு செயலாளர்

பட்டணமும் சூழலும்
திருக்கோணமலை
2007.11.05

திருமதி. ச. ஜெயரீசன்
பிரதேச செயலாளர்
பிரதேச சாகித்திய விழாக் குழுத் தலைவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

FCM MCPE

**LIBRARY DEVELOPMENT SOCIETY**
**TRINCOMALEE DISTRICT**

Trincomalee

# National Reading Month October 2008

## CERTIFICATE OF HONOURED

The Commendation of the Dedicated Contribution of

Mr/Mrs/Miss ...THAMOTHARAM PILLAI PANDIT SUBRAMANIAM..................... in the

Literary Service awards at National Reading Month October 2008

Ceremony held On 24-11-2008 at Trincomalee Town Hall.

**Conducted by**

*Office of the Regional Assistant Commissioner of Local Government &*
*Library Development Society Trincomalee*

Mr. M.S.M. Anhar
Secretary
Library Development Society
Trincomalee

Mr. K. Kanunathan
R.Asst.Commissioner of Local Govt
Dept of Local Govt
Trincomalee

---

**திரு. கா. பி. சுப்பிரமணியம்**

கடந்த முப்பது ஆண்டு காலமாக கல்வித்துறைக்கும், தமிழ் இலக்கிய நாடக, ஒலியத்துறைகளுக்கும், சமூகத்துறைக்கும் அளப்பரிய சேவை செய்து பல பரிசில்களையும், பாராட்டுக்களையும், விருதுகளையும் பெற்றுள்ள திரு. கா. பி. சுப்பிரமணியம் அவர்களுக்கு 2000 ஆம் ஆண்டிற்கான வடக்கு கிழக்கு மாகாண ஆளுநர் விருது 2000.11.05 ஆம் திகதி திருகோணமலையில் இடம்பெற்ற இலக்கிய விழாவில் கௌரவத்துடன் வழங்கப்படுகிறது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அவர் வரைந்த பாடசாலைச் சின்னங்கள் இன்னும் நடைமுறையில் உள்ளது.

















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவரால் வரையப்பட்ட ஓவியங்கள்











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிரான்ஸ் தமிழ் ஒலி நிறுவனம் தினக்குரலுடன் இணைந்து நடாத்திய சில்லையூர் செல்வராசன் ஞாபகார்த்த வானொலிநாடகப் போட்டியில் பங்குகொண்டு முதலாம் பரிசு பெற்ற திருமலை தாபி சுப்பிரமணியத்துக்கு 50,000 ரூபா காசோலை கையளிக்கப்பட்டது




புத்தாயிரத்தில் (மிலேனியம்)2000 ஆண்டில் முதலாவது தமிழ்நூல் புனிதமரியாள் பேராலயத்தில் நள்ளிரவில் புதுவருட ஆராதனையை நடத்தி வைத்த ஆயர் மேதகு கலாநிதி கிங்ஸ்லி சுவாம்பிள்ளை 1.1.2000 அன்று "கவிதாலயம்" என்ற கவிதை நூலை எழுத்தாளர் தாபி சுப்பிரமணியத்திற்கு வழங்குவதை படத்தில் காணலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எகெட் நிறுவனத்தின் நூல் அறிமுக விழாவில்.........





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சாரணீய பாசறையில் ஆணையாளராக தாபி. சுப்பிரமணியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சாரணீய பாசறையில் ஆணையாளராக தாபி.சுப்பிரமணியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1996இல் பிரான்ஸ் தமிழ் ஒலிமன்றம் தினக்குரல் பத்திரிகையுடன் இணைந்து நடத்திய சில்லையூர் செல்வராசனின் நினைவுப் போட்டியில் இவரால் எழுதப்பட்ட "தனக்குத் தனக்கொண்டால்" என்ற நாடகப் பிரதி முதற்பரிசாக ரூபா ஐம்பதினாயிரம் பெற்றுக்கொண்டது.
தாபி சுப்பிரமணியம் பரிசினைப் பெறுவதைக் காணலாம்.



2000ம் ஆண்டு திருகோணமலை - மட்டக்களப்பு மறைமாவட்ட சமூகத் தொடர்பு ஆணைக்குழு நடத்திய 'உலகத் தொடர்பு தின விழா"வில் கலைஞர் விருது தாபி சுப்பிரமணியம் அவர்களுக்கு வழங்கிக் கௌரவிக்கப்பட்டபோது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org